## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**ஐ.டி.ஓ.பி. எண். 71/2025**

**ம.சா. 1**

நாள்: 05.03.2026 .

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மரியபாரதி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 14.09.2021 | ம.சா.ஆ.1 | மேற்படி திருமணத்தை பதிவு செய்ததற்கான திருமண பதிவு சான்று | அசல் |
| 2) | 07.07.2021 | ம.சா.ஆ.2 | எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் | அசல் |

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.05 16:49:17 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 3) | 30.09.2021 | ம.சா.ஆ.3 | எங்கள் திருமணத்தை திருமண பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததற்கான சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 4) | -- | ம.சா.ஆ.4 | எனது ஆதார் அடையாள அட்டை | ஜெராக்ஸ் நகல் |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் M.Com படித்துள்ளேன். நான் தற்போது எங்கு வேலை செய்கிறேன் என்றால் இராமேஸ்வரம் STM Golden Tower Hotel-லில் வேலை செய்கிறேன். நான் மாதம் ரூ.30,000/- சம்பளம் பெறுகிறேனா என்றால் இல்லை ரூ.12,000/- பெறுகிறேன். என் கணவரின் பெயர் பிரசாந்த். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் என் கணவரின் பெயரை பிரசாந்த் என்று சொல்லியுள்ளேன். பிரசாத் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் பிரசாந்த் என்றுதான் சொன்னேன். ஆனால் தவறுதலாக பிரசாத் என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரமாக அவரது ஆதார்கார்டு கொடுத்துள்ளேன்.

நான் என் கணவர் பெயர் மற்றும் விலாசத்தை வேண்டுமென்றே தவறாக கொடுத்து, எதிர்மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பெறுவதற்கு முயன்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரரின் ஆதார் அட்டையை ஆவணமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்கு ப்ரஜன் அஜீஸ் என்ற ஆண் குழந்தை உள்ளது. எங்கள் குழந்தை பிறந்த தேதி என்ன என்றால் 12.07.2022ம் தேதி பிறந்தது. ஆனால் என் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் 12.06.2022ம் தேதி என்றும் சொல்லியுள்ளேன் என்றால் எழுத்தில் ஜூலை மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எண்ணில் 6 என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.05 16:49:20 +0530

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் RC கிறித்துவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எந்த ஊரில் உள்ள எந்த சர்ச்சில் திருமணம் நடந்தது என்றால் அக்காள்மடம் புனித சவேரியா சர்ச்சில் திருமணம் நடைபெற்றது. ஆனால் எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பாம்பன் ஆரோக்கிய அன்னை பங்கு ஆலயத்தில் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் எத்தனை பேர் என்றால் என் அண்ணன் ஒருவர் மட்டும்தான். அவர் வாகன விபத்தில் இறந்துவிட்டார். என் அப்பா அம்மாவை தற்போது என்னுடன் தான் வசித்து வருகிறார்கள். நான் என் பெற்றோருடன் வசித்து வரும் வீடானது 50 சென்ட் அளவுள்ள நிலத்தில் உள்ள பெரிய வீடு என்றால் 50 சென்ட் இல்லை, 12 சென்ட் நிலத்தில் உள்ள கலைஞர் வீடு கட்டும் திட்டப்படி கட்டப்பட்ட சிறிய வீடாகும்.

நான் இதற்கு முன்பு, தென்குடா உதயம் பாலிடெக்னிக் கல்லூரியில் வேலை பார்த்தேன். அந்த கல்லூரியும், நான் பெற்றோருடன் தங்கியுள்ள வீடும் அருகருகே உள்ளன என்றால் 2 கிமீ தூரத்தில் உள்ளன. குழந்தை பிறந்த பின்பு ஞானஸ்நானம் செய்யப்பட்டது. எந்த சர்ச்சில் வைத்து ஞானஸ்நானம் செய்யப்பட்டது என்றால் தங்கச்சிமடம் தெரசால் தேவலாயத்தில் வைத்து செய்யப்பட்டது. RC கிறிஸ்துவ முறைப்படி ஞானஸ்நானம் செய்யப்படும் போது குழந்தைக்கு ஞான தகப்பன் மற்றும் தாய் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு ஞானஸ்நானம் செய்தபோது என் கணவருடன் சேர்ந்து ஞானஸ்நானம் செய்தேனா என்றால் இல்லை. குழந்தைக்கு ஞான தந்தை மற்றும் ஞானதாய் கொடுத்த போது, என் கணவரை கலந்து ஆலோசித்து கொடுத்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் அப்போது அவர் என்னுடன் இல்லை. மேற்படி ஞானஸ்நானத்தை ஒரு சிறுவிழாவாக கொண்டாடினேன் என்றால் இல்லை.

எனது கணவர் 10 வகுப்பு படித்துள்ளார். திருமணம் ஆன நாள் முதல் நான்



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.05 16:49:23 +0530

கணவரை விட அதிகம் படித்துள்ளேன் என்பதால், அவரை நான் மதிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு மதிக்காததால்தான் குழந்தையின் ஞானஸ்நான விழாவில் எதிர்மனுதாரரை கலந்து ஆலோசிக்காமல், அவரை அழைக்காமல் நடத்தினேன் என்றால் சரியல்ல. நான் தற்போது என் வீட்டில் ஒரே பெண்ணாக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். வயதான என் பெற்றோரை கவனித்துக்கொள்ளும் பொறுப்பு எனக்குத்தான் உள்ளது என்றால் சரிதான். நான் எனது அப்பா அம்மாவை பார்த்துக்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், எதிர்மனுதாரரை என்னுடன் எனது பெற்றோர் வீட்டில் வந்து தங்கி வாழும்படி சொன்னேன் என்றால் அவ்வாறு நான் சொன்னதில்லை.

என் பெற்றோரை நான் கவனித்துக்கொள்ள முடியாது என்றால், எதிர்மனுதாரருடன் அவரது வீட்டில் வாழ முடியாது என்று சொல்லி சண்டை போட்டு நான் சென்றுவிட்டேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. நான் எதிர்மனுதாரரை பிரிந்து 3 வருடத்திற்கு மேல் ஆகிறது.

அவ்வாறு நான் பிரிந்து இருப்பதற்கு காரணமாக, எதிர்மனுதாரர் நடத்தை சரியில்லை என்று பொய்காரணத்தை அனைவரிடமும் சொல்லி வந்துள்ளேன் என்றால் நான் ஊரில் அனைவரிடமும் சொல்லவில்லை. இந்த பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் நடந்த விசாரணையின்போது காவல் அதிகாரியிடம் மட்டும் சொன்னேன். அந்த காரணம் பொய் காரணம் இல்லை. அவர் வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பதால்தான் சொன்னேன். அந்த பெண்ணின் பெயரை என்னால் சொல்ல முடியுமா என்றால் அவர் பெயர் பாக்கியலெட்சுமி, அவர் இராமேஸ்வரத்தை சேர்ந்தவர். மேற்படி விவரத்தை என் மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ம.சா.ஆ.1 சான்றிதழை பொய் காரணங்களை கூறி நான் பெற்றேன் என்றால் சரியல்ல. அதனால்தான் பாதிரியார்கள் நடத்தும், உதயம் பாலிடெக்னிக்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.05 16:49:26 +0530

கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் கருவுற்றிருந்ததால், முழு ஓய்வில் இருக்க வேண்டும் என்ற மருத்துவரின் அறிவுரையின் படி அந்த வேலையை விட்டு வந்தேன். காவல் நிலையத்தில் எங்களை விசாரித்தபோது போலிசார் CSR போட்டார்களா என்றால் போட்டார்கள். அதன் எண் தெரியவில்லை.

எனது மனுவில், புகார் கொடுத்த ஒரே வாரத்தில் திருணமத்தின்போது எனக்கு போட்ட 15 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்களை கொடுத்துவிட்டனர் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார்மனுவினை விசாரித்த காவல் அதிகாரி, எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழும்படி அறிவுரை கூறியதால், அந்த CSR ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஊர் பெரியவர்களை வைத்து எனது நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்களை பிரித்து எடுத்துச்சென்றுவிட்டு, தற்போது எதிர்மனுதாரர் என்னை கவனிக்கவில்லை என்று பொய்யாக மனுவிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்க வந்த போதெல்லாம், அவரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. பெற்றோர் மற்றும் பெரியோர்களின் அறிவுரைகளுக்கு உடன்படாமல் நான் தன்னிச்சையாக எதிர்மனுதாரரை பிரிந்து என் பெற்றோருடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை பிரிந்து வாழ்வதாக பொய் காரணம் சொல்லி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. தற்போது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு விவாகரத்து வழங்க சம்மதிக்கிறார் என்றால் எனக்கும் சம்மதம்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.05 16:49:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .